www.tamilarangam.net

# புதிய பாதை

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அதிகார பூர்வ ஏடு

காதம் 2 | நவம்பர் 1984 | அன்பளிப்பு 1-50 | சுவடு 23

## ஆசியாவில் ஏகாதிபத்தியத்தின் தலையீடு



திருமதி இந்திரா காந்தி படுகொலை செய்யப் பட்டுவிட்டார்.

தமக்கு ஆதரவளித்து வந்த ஒருதலைவியை உலக தேசிய விடுதலை இயக்கங்கள் இழந்து நிற்கின்றன.

இவ்விதத்தில் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை அனுதாபத்தோடு அணுகி, ஜயவர்த்தனவின் அரச பயங்கரவாதத்தால் அகதிகளாகி இந்தியாவைத் தஞ்சமடைந்தவர்களையெல்லாம் ஆதரித்து, இலங்கையின் தமிழர் பிரச்னைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காண பெருமுயற்சி எடுத்து வந்தவர் என்ற விதத்தில் திருமதி இந்திராவின் மறைவு இலங்கைத் தமிழ் மக்கள் அனைவருக்குமே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

எளிமையும், நேர்மையும், உறுதியும் கொண்டவராக எந்தவொரு அணியிலும் சேராமல் ஆனால் பாரதத்தை முற்போக்கான திசையில்இட்டுச் சென்றதும், தென் ஆசியாவில் ஏகாதிபத்தியத்திற்குத் துணைபோகாத வலிமைமிகு தலைவியாய் இருந்ததும், இந்துமகா சமுத்திரம் பிற்போக்காளர்களின் ஆதிக்கத்திற்குட்படுவதை எதிர்த்து வந்ததும், உலக சமாதானத்தில் அக்கறை காட்டியதுமே அவரது படுகொலைக்குக் காரணமாயிருக்கின்றன.

இதுவரை இந்தியத் துணைக் கண்டத்தில் இன, மத வெறிகளைத்தூண்டிவிட்டு நாட்டைச் சிதைக்க பற்பல சதிகள் முயன்றுவந்திருப்பதும், எல்லைப் பிரதேசங்களில் ஆக்கிரமிப்பு, ஆத்திர மூட்டல்கள் இடம் பெற்று வந்திருப்பதுமே திருமதி. இந்திராவின் படுகொலையில்ஏகாதிபத்தியத்தின் பங்கு இருக்கிறது என்று நாம் உறுதியிட்டுக் கூறுகின்றோம்.

இந்தியாவைச் சீர்குலைப்பதற்காக வெளிநாட்டு, உள்நாட்டு சக்திகள் ஈடுபடுவதாக அவரே பன்முறை கூறியுள்ளார்.

உலகில் இன்று இரு சக்திகளுக்கிடையிலேயே போராட்டம் நடைபெறுகின்றது. ஒன்று சோஷலிஸம் மற்றது ஏகாதிபத்தியம்.

முற்போக்குக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் திருமதி. இந்திராவைக் கொலை செய்யக்கூடிய தேவை ''வெளிநாடு'' ஏகாதிபத்தியத்திற்கேயன்றி வேறெதுவுமாயிருக்க முடியாது. ஏனெனில் அவரின் மறைவி

(11-ம் பக்கம் பார்க்க)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எமது நோக்கு

ஒரு நாட்டின் விடுதலை என்பது எந்த ஒரு இயக்கத்தினதும் தனி குத்தகைக்குரியதல்ல. இது பாந்துபட்ட பல லட்சம் மக்களின் விமோசனத்துடன் சம்பந்தப்பட்டது உலகெங்கும் சுரண்டலுக்கும், ஒடுக்கலுக்கும் மேலாதிக்கத்துக்கும் எதிராக போராடிவரும் கோடிக்கணக்கான மக்களாலும், முற்போக்கு சக்திகளாலும் விடுதலை ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்றது ஆகவே இந்த போராட்டத்தில் நாம் ஈடுபடும்போதே விமோசனத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கும் எமது மக்களின்பாலும்: ஏனைய சர்வதேச முற்போக்கு இயக்கங்களின்பாலும் எமக்குள்ள பொறுப்புகளை மறந்துவிடலாகாது.

ஒரே போராட்டத்திற்கான போர் தந்திரங்களையோ யுத்த தந்திரங்களையோ வகுப்பது அந்தந்த இயக்கங்களின் மறுக்க முடியாத உரிமையாகும். இந்த உபாயங்கள் அந்தந்த இயக்கங்களின் வர்க்க பின்னணி, அரசியல், இராணுவப்பலம்: இயக்கப் பலம். மக்கள்பாலுள்ள ஆதரவு என்பவற்றிற்கேற்ப வேறுபடலாம்.

குறிப்பிட்ட ஒரு இயக்கத்தின் போர் தந்திரங்கள், யுத்த தந்திரங்களில் ஏற்படும் தவறுகள் அந்த இயக்கத்தை மட்டும் பாதிடபதில்லை. மாருக ஏனைய விடுதலை இயக்கங்களையும்: அவர்களின் வேலைத் திட்டங்களையும் மட்டுமின்றி அனைத்து மக்க்ளின் போராட்டங்களையும் கூட பாதிக்கக் கூடியது. ஆகவே ஒவ்வொரு இயக்கமும் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது தமது இயக்கங்களை, தமது இயக்க வளர்ச்சியை, தமது இயக்கப்பிரசாரங்களை மாத்திரம் கவனத்திற்கு எடுத்து செயற்படுதல் தவிர்க்கப்படுதல் அவசியமாகும்.

அண்மைக்காலங்களில் நடந்த சில் நடவடிக்கைகளினுல் சில இயக்கங்கள் தமது குறுகிய விளம்பர நோக்கங்களை மாத்திரம் கருத்திற்கெடுந்தனவே ஒழிய முழு மக்களின் விடுதலை அல்ல என்பதைத் தெளிவாக்குகின்றன. India Today, Sunday observer (இந்தியப் பத்திரிகை) போன்ற பத்திரிகைகளிலும் B. B. C ஆங்கில ஒலிபரப்பில் கொடுத்த பேட்டியையும் இவ்வகையானதாகவே குறிப்பிடலாம். இவர்களால் வழங்கப்பட்ட செய்திகளால் இவர்களுக்கு கிடைத்த நன்மையை விட பொதுவாக போராட்டத்திற்கு ஏற்படுத்திய தீமைகளே அதிகம் என்பது தெளிவு.

போட்டிகளில் ஏனைய தோழமை இயக்கங்களின் இராணுவ நடவடிக்கைகளை அதுவும் அந்த இயக்கங்கள் பகிரங்கப்படுத்த விரும்பாத விடயத்தைக் குறிப்பிட்ட ஒரு இயக்கம் பற்றி சரியாகவோ, தவருகவோ தகவல்களை வெளிப்படுத்தி தம்மை பிரபல்யப் படுத்த முயல்வது வெறும் பாராளுமன்ற அரசியல்வாதிகளின் பிரச்சார வகைப்பட்டதாகும். இந்த வகையில் இவ் இயக்கங்கள் ஏனைய இயக்கங்களிற்கும், மொத்த விடுதலைப் போராட்டத்திற்கும் தீங்கு விளைவிப்பவர்களாகவே செயற்படுகிறர்கள். அத்துடன் எமது போராட்டத்தின் பால் கரிசனையும் ஆதரவும் காட்டும் நாடுகளை இராஜதந்திர ரீதியிலான நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளார்கள். இச்சம்பவங்கள் எமது போராட்டத்திற்கான ஆரோக்கியமான நிலைமையை உருவாக்கவில்லை என்பது கவனத்திற்குரியது.

புதிய யுத்த தந்திரங்களை வகுப்பதாக புதிய இலக்குகளை பகிரங்கப் படுத்துவது என்பது குறுகிய நோக்கமுடைய விளம்பரங்களை மட்டுமே அடிப்படையாக கொண்டிருக்க முடியும். ஏதாவது செய்து விடவேண்டும் என்ற நோக்கில், நீண்டகால போராட்டத்திற்கு ஊறுவிளைவிக்கக்கூடியதும் எதுவித பாரிய தாக்கத்தையும் ஏற்படுத்தாமல், எதிரியை உஷார்படுத்த வெறும் "சத்த வெடிகளை" வெடிக்க செய்வதுகூட இதன்பாற் பட்டதே.

இது நெருக்கடி மிகுந்த காலகட்டம். மக்கள் ஏற்கனவே அதிகம் நொந்து போயுள்ளார்கள். ஆகவே அவர்களின் நம்பிக்கையை பெறுவது முக்கியமானது, இன்று இயக்கங்களில் ஒற்றுமையே அவசிய தேவையாக உள்ளது ஆகவே இந்நோக்கங்களை பாதிக்காதவாறு எந்த இயக்கத்தின் நடவடிக்கையும் அமையவேண்டியது அவசியமாகின்றது.

★

## அமைச்சர் ஹமீதின் பித்தலாட்டம்

அக்டோபர் 29ம் திகதியன்று நமீபிய மக்களுடனுன ஒருமைப்பாட்டு வாரத்தை ஐ. நா. கொண்டாடுவதையொட்டி இலங்கையின் வெளிநாட்டுறவுகள் அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் விடுத்துள்ள செய்தியில் "நமீபிய மக்கள் சுய நிர்ணயத்துக்காகவும், விடுதலைக்காகவும் நடத்தி வரும் போராட்டம் நியாயமானதென்றும்; அம் மக்கள் தமது சுதந்திர குறிக்கோளை அடைய உதவியாக சர்வதேச சமூகம் அதன் முயற்சிகளை இருமடங்காக்க வேண்டுமென்றும், அம் மக்கள் விடுதலை பெறுவதற்காக அணிசேரா நாடுகளுடன் சேர்ந்து இலங்கையும் ஆதரிப்பதாகவும்" கூறியுள்ளார்.

நமீபிய மக்களின் விடுதலைப் போராட்டம் நியாயமானதென்ருல், அதேவித தன்மைகளைக் கொண்ட தமிழீழ விடுதலைப் போராட்டம் மட்டும் எப்படித் தவருனதாக இருக்க முடியும்?

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அம்மா உனக்குத்தான்...

அம்மா!
என்னைக் காண்பதற்காக
உன்னை ஏன்
வருத்திக் கொள்கிறாய்
அதுவும் இந்தவயதில்
அம்மா!
உன் மகனின் உயிர்
நீ பெற்றெடுத்த
உடலில் இல்லை
அவனின் கொள்கையில்தான்
இருக்கிறது
இப்போது புரிந்துகொள்
மரணம் அவனை அழித்துவிடாது
எனக்காக கவலையுறாதே!
திருமண வயதில் தங்கைகள்
தள்ளாத வயதிலோ தாங்கள்
புரிகிறது எனக்கு
உங்கள் கவலைப் பெருமூச்சு
அடிமை நிலையால்
முலை அரிந்து
மூடர்கள் சிரித்தபோது!
நிலை நினைந்து தவித்தாளே
அவள் எனக்குத்
தங்கையில்லையா?
காடையர்கள் கற்பழித்துக்
களித்தபோது
குமுறுகின்ற எரிமலையாய்
கனன்றாளே
அவள் எனக்குத்
தங்கை இல்லையா?
கொடியவரால்
பிறந்த மேனியாய்
பொசுக்கப்பட்டாளே தீயில்
அவள் எனக்குத்
தங்கை இல்லையா?
உற்றவரை
உடன் பிறந்தவரை
பெற்றவரை
பேணி வளர்த்தவரை
இழந்து
அற்றவராய்
அரற்றி அழுதாளே
அவள் எனக்குத்
தாய் இல்லையா?
உயிர்ப்பு ஓயும்வரை
உழைப்பை ஈந்துவிட்டு
வற்றிய உடலாய்
ஒட்டிய வயிறாய்
வாடுகின்றாரே
அவர்
என் உறவு இல்லையா?
எல்லாத் தாய்க்கும்
எல்லாத் தங்கைக்குமாய்
துன்பத்தின் சாயலே
தொடர் கதையாய்ப் படராத
விடிவொன்று வேண்டித்தான்
புறப்பட்டேன் ....

# மாணவர் போராட்டம்

எத் தேசிய ஒடுக்குமுறையும் விடுதலையின் ஒவ்வொரு அங்கங்களையும் நசுக்குவதிலே முழுமூச்சாக இருக்கும் எமது தமிழ் தேசிய விடுதலைப் போராட்டமானது முக்கிய கால கட்டத்தில் நிற்கின்றது, இவ்விடுதலைப் போராட்டத்தில் பலவகை அணிகள் தங்கள் தகுதிக்கேற்ப, தமக்கே உரித்தான பாணியில் போராட வேண்டுமேயொழிய, எந்த சிறிய சக்திகளும் இவ்விடுதலைப் போராட்டத்தில் இருந்து ஒதுங்கி விட முடியாது. அந்த வகையில்தான் தற்பொழுது நடந்து கொண்டிருக்கும் மாணவர் போராட்டத்தை குறிப்பிடலாம். இங்கு மாணவர்கள் முதலில் தங்கள் உரிமைகளுக்கானதும்; அடுத்து தாம் பிரதிநிதிப்படுத்தும் சமூகத்திற்கானதுமான போராட்டங்களை திட்டமிட்ட ரீதியில் நடாத்திச் செல்ல வேண்டும். முக்கியமாக மாணவர்களின் பிரதான குறிக்கோள் கல்வியாக இருப்பதால், கல்வி கற்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கும் வரை அதை உபயோகப்படுத்தல் வேண்டும். மாணவர் போராட்டங்களில் கோரிக்கைகள், குறிக்கோள் என்பன சமுதாய மாற்றத்தினூடாகவே நிறைவேறும் என்பதைக் கருத்திற் கொண்டு, சரியான தலைமையின் கீழும் சரியான வேலைத்திட்டத்தின் கீழும் மாணவர்களை வழிநடத்திச் செல்லுதல் மாணவ அமைப்புக்களின் கடமையாகும். ●

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஐக்கிய மதஸ்தாபனம் தமிழீழ விடுதலைப் போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த சிங்கப்பூரில் ஏற்பாடு செய்த மகாநாட்டிற்கு எமது இயக்கம் அனுப்பிய பதில் கடிதம்

வண கென்னத் பெர்ணுன்டோ,
கல்வி கருத்தாய்வுக்கான கிறிஸ்தவ சங்கம்,
490/5, ஹவ்லக் வீதி,
கொழும்பு-6
இலங்கை

அன்புள்ள வண. கென்னத் பெர்ணுன்டோ அவர்களுக்கு,

தங்களின் கடிதமும் ஐக்கிய மதஸ்தாபனத்தின் அறிக்கையும் 18-10 84ல் கிடைக்கப் பெற்ருேம். அதற்காக எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ருேம்.

தமிழ் மக்கள்மீது அரசாங்கம் மேற்கொண்டுள்ள இன அழிப்புத் தாக்குதல்களைத் தடுத்து, பேச்சுவார்த்தைகள் மூலம் எமது பொதுப் பிரச்னைக்குத் தீர்வுகாணக்கூடிய ஒரு சுமுக நிலையை உருவாக்குகின்ற நல்லெண்ணம் படைத்த அனைவரினது முன்முயற்சிகளையும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் வரவேற்கின்றது.

எனினும் ஐக்கிய மத ஸ்தாபனத்தின் பொதுச் செயலாளரான வண வல்பொல ராகுல அவர்கள் தமிழ் இளைஞர்களை ''......வன்முறைகளை அநீதியான நடவடிக்கைகளையும் தவிர்த்துவிட்டு சமாதானம் பேச்சுவார்த்தைகளிற் கலந்துகொள்ள வேண்டும்'' எனக் கோரியிருப்பதையிட்டு நாம் அதிருப்தியே கொள்ளின்ருேம்.

தமிழினத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளைப்பற்றி எமது சிங்களச் சகோதரர்கள் கொண்டுள்ள துக்ககரமானதும் தவருனதுமான புரிந்துகொள்ளலே இது வாகும்.

அதேவேளையில் ''...தமிழ் இளைஞர்கள் அமைதியாக இருக்கும்வரை அவர்களுக்கெதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்கக் கூடாது'' என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருப்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிருேம்.

உங்கள் அரசாங்கம், ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போர்க்குணமிக்க இயக்கங்களை எதிர் கொள்ளவில்லை மாருக அப்பாவிப் பிரஜைகளான தமிழர்களையே தாக்குகிறது, கொடுமைப் படுத்துகிறது என்பதே உண்மை நிலை.

எனவே நாம் தங்களின் ஸ்தாபனத்திடம் கேட்டுக் கொள்வதெல்லாம் பேச்சுவார்த்தைக்கான சூழலை ஏற்படுத்தக் கூடியதான தமிழ் மக்களுக்கெதிரான இனஅழிப்புக் கொள்கைகளை முதலில் நிறுத்துங்கள் என்று உங்கள் அரசாங்கத்திடம் கூறுங்கள் என்பதைத்தான்.

இரண்டாவதாக, தங்கள் ஸ்தாபனத்தின் பொதுச் செயலாளர் மற்றும் பிரதிநிதிகளாகக் குறிப்பிட்டுள்ள பிக்குகளுக்கு கௌரவமளிக்கும் அதேவேளையில், இலங்கையை எதிர்கொண்டுள்ள பிரச்னைகளுக்கு ஒரு சமாதான பூர்வமான தீர்வைக் காண முன்வந்த போதெல்லாம் பௌத்த குருமார்களே அதற்கு முட்டுக் கட்டையாக இருந்திருக்கிருர்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்ருேம்.

1958ல் காலஞ்சென்ற திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுடன் செய்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவதற்கு காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவை நிர்ப்பந்தித்தது பௌத்த பிக்குகளே. 1965ல் திரு. டட்லி சேனநாயக்கா ஆட்சியின்போது டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தத்தை நிறைவேற்றவிடாமல் தடுத்ததும் பௌத்த பிக்குகளே கறைபடிந்த 1983 ஜூலை கலவரத்தின்போது அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிப்பதற்கு பௌத்த பிக்குகள் தூண்டியது மட்டுமல்ல அவர்களிற் பலர் அந்த அரசாங்கமே நடத்திய இனப் படுகொலைகளின்போது சூறையாடல், படுகொலை சம்பவங்களிற்கூட மும்முரமாகப் பங்கேற்றுள்ளார்கள்.

துரதிர்ஷ்டவசமாக இன்று கூட பௌத்த விகாரைகள்-அவை தென் பகுதியிலிருந்தாலென்ன, வேறுபகுதிகளிலிருந்தாலென்ன — தமிழர் விரோதத்தையும், இனவெறியையும் போஷித்து வளர்க்கும் இடங்களாகவே இருக்கின்றன.

இன்றும்கூட இந்து ஆலயங்களுக்குள் பௌத்த பிக்குகள் பலவந்தமாகக் குடியேறி அவற்றைபௌத்த விகாரைகளாக மாற்றிவருகிருர்கள் சமளன்குளம், உழக்குளம் ஆகிய இடங்களிலிருந்த இந்து ஆலயங்களில் பௌத்த சிலைகளை நிறுவி அவற்றை விகாரைகளாக மாற்றியுள்ள ஒரு சில சமீபகால உதாரணங்கள் மட்டுமே. மடுவில் 30 ஆண்டுகளுக்கு முன் மடுரோட் ஸ்ரேசன் மாஸ்டர் அருளானந்தம் மற்றும் பெருந்தெருக்கள் திணைக்களத்தைச் சேர்ந்த ஒரு பொறியியலாளர் ஆகியோரால் கட்டப்பட்ட ஒரு இந்துக் கோவிலை இப்போது ஒரு பௌத்த பிக்கு அபகரித்துள்ளார். முல்லைத் தீவு பகுதியிலுள்ள தண்ணிமுறிப்பு குருந்துமலை இந்து ஆலயத்தில் ஒரு

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பௌத்த பிக்குவை அமைச்சர்சிறில் மத்யூ குடியமர்த்தியதோடு அவ்வாலயம் இப்போது "குருந்து மஹாரஜவிகாரை" என்றும் பெயர் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது. இப்பட்டியல் இப்படியே தொடருகின்றது.

இவ்விடத்தில், எமது போராட்டம் சிங்கள மக்களுக்கோ அவர்தம் மொழிக்கோ, அவர்களின் கலாசாரத்திற்கோ எதிரானதல்ல என்பதையும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சார்பில் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

சிங்கள மக்களைக்கூட ஒடுக்கப்பட்ட மக்களாகவே நாம் இனம் காண்கின்றோம். துரதிர்ஷ்டவசமாக இன்று இனவாதமானது சிங்கள சமுதாயத்தை அரித்துத் தின்றுவிட்டதால் நமது மக்களைப் பிளவுபடுத்துவதற்கு அரசாங்கம் இனவாதத்தை எப்படிப் பாவிக்கிறது என்பதை அறிய முடியாதவர்களாயிருக்கின்றார்கள்.

எமது பிரச்னைகளுக்கு ஒரு சமாதான தீர்வைக் காண்பதற்கு இட்டுச் செல்லக் கூடியதான தங்களது ஸ்தாபனத்தின் முன் முயற்சியை மீண்டும் வரவேற்கின்ற அதேவேளையில், உங்கள் அரசாங்கம் அப்பாவித்தமிழ் சமுதாயத்தின்மீது பிரயோகித்துவரும் இன ஒழிப்பை நிறுத்தக் கோருமாறு தங்கள் ஸ்தாபனத்தையும் அதன் அங்கத்தினர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ் மக்கள் சிங்கள மக்களைத் தங்கள் எதிரிகளாகக் கருதவில்லை என்பதையும் அவர்களுக்குவிளக்கிக் கூறும்படியும் ஐக்கிய மத ஸ்தாபனத்தைக் கேட்டுக் கொள்கின்றோம். இரு இன மக்களையும் ஒடுக்கிவருகின்ற பாஸிஸ அரசுக்குஎதிரானதே எங்கள் போராட்டம். எனவே ஏகாதிபத்தியத்திற்குத் தாரைவார்க்கப் பட்டுவரும் எமது இரு இனங்களையும் தேசத்தையும்விடுவிப்பதற்காக எம்முடன் இணைந்து உதவி செய்ய முன்வாருங்கள் என்பதே நாம் சிங்கள மக்களுக்கு விடுக்கும் செய்தியாகும்.

தமிழ் மக்களது போராட்டத்தின் தன்மையையும் காரணிகளையும் சாதாரண சிங்கள மக்கள் புரிந்து கொண்டால் மட்டுமே எமக்கிடையே பேச்சுவார்த்தைகள் இடம் பெற முடியும்.

எவ்வாறுயினும் தாங்கள் மேற்கொண்டுள்ள முன்முயற்சிகளுக்காக தமிழ் மக்களின் சார்பிலும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சார்பிலும் தங்களுக்கும் தங்கள் ஸ்தாபனத்திற்கும் மீண்டும் நன்றி கூறுகின்றோம்.

க. உமாமகேஸ்வரன்
செயலதிபர்
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

---

சாங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலையின் லாரிகளும், டிராக்டர்களும், டிப்பர்களுமே பயன்படுத்தப்பட்டன.

பிடித்துச் செல்லப்பட்டவர்கள் கடும் வெயிலில் தவிக்கவிடப்பட்டனர். அவர்கள் பொசுக்கும் வெயிலில் இம்சைக்குள்ளாக்கப்பட்டனர்.

விடுதலை வரலாற்றில் ஆதிக்க வெறியர்களின் அடக்குமுறைகளும், கொடூரங்களும், சித்திரவதைகளும் சர்வ சாதாரணமானதே.

அதனால்தான் அவற்றை எதிர்த்து தமிழீழ இளைஞர்கள் போராடி வருகின்றார்கள். மக்களும் இன்று அவர்களின் பின்னே அதிசமதிகமாக அணிதிரளத் தொடங்கியுள்ளனர்.

ஒன்று மட்டும் உறுதியானது. இந்த மக்கள் என்றும் இப்படியே இருந்துவிடப் போவதில்லை.. எப்போதும் அவர்கள் அயல் கிராமங்களில் தஞ்சமடையப் போவதில்லை.

மிகக் கிட்டிய ஒரு நாளில் அவர்கள் கிளர்ந்தெழுந்தான் போகின்றார்கள். அந்த எழுச்சிக்கு ஜே. ஆரின் அரசு மட்டுமல்ல ஏகாதிபத்திய சக்திகளே முகம் கொடுக்க முடியாது.

ஏனெனில் மக்கள் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதாக எந்த வரலாறும் இல்லை.

மக்கள் அதிகாரத்தை கைப்பற்றி வெற்றி வாகை சூடுவதே வரலாற்றுப் பாடம் தமிழீழத்தின் நியதியும் அதுதான்!

## மாதகலில் இராணுவ வெறியாட்டம்

அக்டோபர் 17ஆம் திகதி இளவாலைப் பகுதியில் இராணுவத்தினர் வழியை மறித்து சோதனைகளில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் மீது சில இளைஞர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனையடுத்து இராணுவம் அப்பாவி மக்களைச் சுடத் தொடங்கிற்று. பல பொது மக்கள் காயமுற்றார்கள். இளவாலை கத்தோலிக்க ஆலயம் நொறுக்கப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டது.

அடுத்த நாள் ஆயுதப் படையினர் மாதகல் கிராமத்தை முற்றுகையிட்டனர். இதில் கவச வண்டிகள் டிரக்குகள் உட்பட 53 வாகனங்களும், 1000க்குமதிகமான இராணுவத்தினரும் ஈடுபட்டனர்.

இம் முற்றுகை 2 தினங்களாக நடந்தது. இராணுவத்தினர் கிராமம கிராமமாகவும வீடு வீடாகவும் சென்று, "தேர்தல்" நடத்தினர். அட்டூழியம் புரிந்தனர். ஆண்கள் முற்கனவே வெளியேறி அயல கிராமங்களில் தஞ்சமடைந்திருந்ததால் ஒருவரையும் கைது செய்ய முடியவில்லை.

இது இராணுவ வெறியர்களை உன்மத்தமடையச் செய்தது. சிறுவர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர். பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். 45 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. 75க்குமதிகமான குடும்பங்கள் அகதிகளாக்கப்பட்டனர்.

சோதனையிடுகிறோம் என்ற பெயரில் இராணுவத்தினர் வீடுகளிலுள்ள பொருட்களைத் திருடிச் செல்கின்றனர். இப்படி இன்று எண்ணற்ற வீடுகளிலிருந்த ரேடியோ, டூ இன் வன், மணிக்கூடுகள், மற்றும் பெறுமதியான பொருட்களெல்லாம் இராணுவக் கொள்ளையர்களால் சூறையாடப்பட்டுள்ளன.

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோயில் தாக்கப்பட்டது. அக்கோவில் ஐயரை மீன் சாப்பிடும்படி இம்சித்தனர்.

மீனவர்களின் படகுகள் எடுத்துச் செல்லப்பட்டன. அவற்றை ஏற்றிச் செல்ல அரசுக்குச் சொந்தமான

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உலகப்போர் அபாயமும் தமிழீழ விடுதலையும்

,, நான் ஸ்புட்னிக்கின் வாரிசு. என்னை கண்காணிப்பு விண்கோள் (Observation sattelite) என்று அழைப்பார்கள். நான் என் சக தோழர்களுடன் ஏகாதிபத்திய நாடுகளை கண்காணிப்பதற்காக விண்வெளியில் தற்சமயம் சுற்றிக்கொண்டிருக்கிறேன். இன்னும் சிறிது நேரத்தில் அமெரிக்க நிலப்பரப்பின் மேல் எனது பயணம் தொடரப் போகிறது. இன்று அளவிற்கதிகமான மேகக்கூட்டங்கள் எனது புகைப்பட கண்காணிப்பைத் தடை செய்வதால் கதிரியக்க கண்காணிப்பு கருவியின் (Infra-red scanning) ஊடாக எனது பணியினை மேற்கொள்கிறேன்.

அமெரிக்க நிலப்பரப்பின் மேல் 600 க்கும் மேற்பட்ட கதிரியியக்க செய்திகள் (Infra-red signalls) அமெரிக்க கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் (Inter continental Balastic Missiles) தாக்குதலுக்கு வெளியேறுவதை எனது கதிரியக்க கண்காணிப்பு கருவி எனக்கு உணர்த்தியது. இப்பொழுது நேரம் சரியாக மாலை 6-00 மணி, அடுத்த 30 விநாடிகளில் இச்செய்தி மாஸ்கோவில் உள்ள சோவியத் ஏவுகணை கட்டுபபாட்டு நிலையத்திற்கு எனது தொடர்பு நிலையத்தின் ஊடாக தெரிவிக்கப்படும். இன்னும் 1 நிமிடத்தில் அமெரிக்க ஏவுகணைகளின் இலக்குகளை நான் அறிவேன் நேரம் 6.03 நிமிடம் சோவியத் ஏவுகணைகள் தாக்குதலுக்கு வெளியேறும் செய்திகளை அறிகிறேன். நேரம் 6.25 சோவியத் யுத்த கட்டுப்பாட்டுக் குழுவினை தாங்கிய விமானமும் தாக்குதல் விமானங்களும் சோவியத் நிலையங்களிலிருந்து வெளியேறுகின்றன. அவ்வாறே அமெரிக்க யுத்த கட்டுப்பாட்டு குழுவும், தாக்குதல் விமானங்களும் (Long range strategic bombers) தளத்தை விட்டு வெளியேறுகின்றன. நேரம் 6. 27 சோவியத் ஏவுகணை நாசகாரிகள் (ABM) சோவியத் நகரங்களை தாக்கவரும் ஏவுகணைகளை விண்வெளியில் அழிப்பதற்கான முயற்சியில் தோல்வி அடைகின்றன. நேரம் 6.30 சோசலிச நாடுகள் மற்றும் சார்பு நாடுகள் பல ஆயிரக்கணக்கான மெகாடன் சக்தியுள்ள அணுகுண்டுகளால் தாக்கப்பட்டு உருத் தெரியாமல் அழிகின்றன. அணுகுண்டுகளின் கதிர்வீச்சு ஏனைய பிரதேச உயிரினங்களை அழிக்கின்றது. நேரம் 6 மணி 33 நிமிடங்கள் அமெரிக்க ஏவுகணை நாசகாரிகளிடமிருந்து (Anti Ballistic Missil) தப்பிய ஏவுகணைகள் ஏகாதிபத்திய நாடுகள், சார்பு நாடுகளை தாக்குகின்றன. நகரங்கள் உருத் தெரியாமல் சிதைக்கப்பட்டு உயிரினங்கள் அழிகின்றன. 33 நிமிடங்களுக்குள் மூன்றும் உலக யுத்தம் முடிந்தது. இன்னும் அரை நூற்றாண்டுக்குள் உயிரினம் பூமியின் மேல் வாழ முடியாத அளவு கதிரியக்கம் புவியின் மேல் வீசிக்கொண்டிருக்கின்றது...

(மூன்றும் உலக யுத்தம் நடைபெறுமானால் அதன் விளைவுகள் எவ்வகையானதாக இருக்கும் என்பதை எடுத்துக்காட்டும் முகமாக, விஞ்ஞானிகளின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட கற்பனை)

... ...1914 ம் ஆண்டு தொடக்கம் 1918ம் ஆண்டுவரை முதலாவது உலக மகா யுத்தமும், மீண்டும் 1939 ம் ஆண்டு முதல் 1945 ஆண்டு வரை இரண்டாம் உலக யுத்தமும் நடைபெற்று முடிந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் 38 வருடங்கள் கழிந்து விட்டன. இவ்வேளையில் மூன்றும் உலகப்போரைப் பற்றிய சர்ச்சையும், பயமுறுத்தல்களும் வெகுவாக நடைபெறுகின்றன. மூன்றும் உலகப்போர் அபாயத்தை முன் வைத்துத்தான் தமிழீழ விடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுக்கவேண்டும், பிராந்திய, தேசிய சூழல்கள் என்று விவாதிப்பது கூடாது என்று சில இயக்கங்கள் செயல்பட்டு வரும் இவ்வேளைகளில் இப்பிரச்சினையை ஆராய வேண்டிய கட்டாயத்திற்கு நாம் உள்ளாக்கப்பட்டுள்ளோம்.

முதலாம், இரண்டாம் உலகப் போர்கள் நடப்பதற்கு காரணமாக இருந்த சமூக, பொருளாதார முரண்பாடுகள் இரண்டாம் உலகப் போருக்குபின் முடிந்துவிடவில்லை. முரண்பாடுகள் மேலும் கடுமையாகி உலக நாடுகள் அனைத்தும் ஏதாவது ஒரு பொருளாதார தத்துவ கூட்டமைப்புக்களில் தங்களை பிணைத்துக் கொண்டு வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கப் பட்டுள்ளன. அவ்வகையில் இன்று உலகநாடுகள் முதலாளித்துவ பொருளாதாரம், சோசலிச பொருளாதாரம், கூட்டுப் பொருளாதாரம் என்ற பொருளாதார அமைப்புகளுக்குள் பிரதானமாக முதலாளித்துவ, சோசலிச தத்துவங்களை கொண்டு இயங்குகின்றன.

மூன்றும் உலகப் போரைத் தொடங்குவதற்கும் உலகை அழிப்பதற்குமான வலிமை இன்று உலகில் மூன்றே மூன்று நாடுகளிடம்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மட்டும் தான் இருக்கிறது. அவை முதலாளித்துவ அமெரிக்கா, சோசலிச ரஷியா, சீனுஆகியவையே. உலகில் முரண்பட்ட அமைப்புகளுக்கிடையிலான போராட்டம் நடைபெறுவது இயற்கையே. வலிமை மிகுந்த சக்திகள் வலிமையில்லா சக்திகளை அழிப்பதும் சமவலிமையான சக்திகள் வெற்றி தோல்வியறிய மோதிக்கொள்வதும் இயற்கையே.

இன்றைய உலக அரங்கில் முரண்பாடுகளை களைவதற்காக நடத்தப்படும் போராட்டங்களிலேயே வலிமையின் உண்மையான வடிவங்கள் வெளிப்பட்டுள்ளனவே தவிர அணுக்குண்டுகளின் எண்ணிக்கைகளால் முரண்பாடுகள் களையப்படவில்லை.

கொரியா நாட்டைத் தாக்கிய டக்லஸ்மெக்கார்த்தாவின் (Douglas Mcarthur) அணுக்குண்டு மிரட்டலுக்கு செஞ்சீனம் அச்சப்பட்டிருந்தால் இன்று ஒரு சோசலிசகொரியா இருந்திருக்காது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அணுகுண்டுகளுக்கு காஸ்ட்ரோ அச்சப்பட்டிருப்பாராயின் இன்று ஒரு சோசலிச கியூபா (Cuba) இருந்திருக்காது.

அணுகுண்டுகளின் அச்சுறுத்தல் மட்டுமல்ல, இரண்டு உலகப்போர்களிலும் பயன்படுத்தப்பட்ட குண்டுகளைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிக குண்டுகள் சதுர அடிக்கு ஒன்றாக வீசப்பட்டபோதிலும்வியட்நாமிய மக்களைப் பின்வாங்க வைக்க முடியவில்லை, வைக்கவும் முடியாது. ஏனென்றால் அந்நாட்டுப் போராட்டங்கள் அந்நாடடு தேசிய, இன பொருளாதார முரண்பாடுகளின் தவிர்க்க முடியாத வெளிப்பாடுகளாக அமைந்திருந்தன. அகச்சூழல்களின் முரண்பாடுகளின் பரிணாம வளர்ச்சியே போராட்டங்களில் மக்களைத் தள்ளுகின்றன. அத்தகைய போராட்டங்களின் தன்மையும் வடிவங்களும் அந்நாடுகளின் அகச் சூழல்களினாலேயே நிர்ணயம் செய்யப்படுகின்றன. புறச்சூழல்கள் முரண்பட்ட சக்திகளுக்கு வலிமையூட்டவோ, எதிர்க்கவோ பயன்படுத்தப்பட்டு போராட்டத்தின் விளைவுகளை நிர்ணயம் செய்யப் பயன்படுத்தப்படலாமே அன்றி முரண்பாடுகளைக் களையப்பயன்படுத்த முடியாது.

196 'ம் ஆண்டு கியுபா (CUBA) நாட்டிலிருந்து சோவியத் ஏவுகணைகளை அகற்றுவதற்காக அமெரிக்க முற்றுகையின் பொழுது சோவியத் யூனியன் அணு ஆயுதங்களில் அமெரிக்காவைக் காட்டிலும் அதிக பலம் கொண்டிருந்தாலும் தோல்வியை ஒப்புக்கொண்டு பின்வாங்கியதும், 1961 ம் ஆண்டு தொடக்கம் 1978ம் ஆண்டு வரை சுமார் 9½ இலட்சம் அமெரிக்க ராணுவ வீரர்களைக் கொண்டு வியட்நாமில் முதலாளித்துவத்தை காப்பாற்ற போராடிய அமெரிக்கா 1973ல் தோல்வியை ஒப்புக்கொண்டு வெளியேறியதும், 1975 ல் 55 அமெரிக்க தூதராலய அலுவலகர்கள் ஈரானிய மாணவர்களால் பணயக்கைதிகளாக்கப்பட்டும் அமெரிக்கா தனது அணுகுண்டுகளை பயன்படுத்தாததும் எதைக் காட்டுகின்றன? சோஷலிஸ—முதலாளித்துவ முரண்பாட்டின் உச்சகட்ட வெளிப்பாடாகக் கூட இன்னொரு போரைத் தொடங்க முடியாத அளவுக்கு விஞ்ஞானம் வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதையல்லவா?

போராட்ட முடிவுகள் வெற்றி தோல்வியை மட்டும் நிர்ணயம் செய்யும் என்ற சூழல்கள் இருந்த வரை உலகப் போர்கள் தொடங்கப்பட்டன. ஆனால் போராட்ட முடிவுகள் எவருக்கும் வெற்றிதோல்வியை தராது. மாறாக உலகின் முழு அழிவில் தான் முடியும் என்றசூழலை நவீன ஆயுதங்களின் வளர்ச்சி உறுதிப்படுத்தியவுடன் முன்னைய உலகப் போர்கள் தொடங்குவதற்கு காரணமாக இருந்த சமூக, பொருளாதார முரண்பாடுகள் தொடர்ந்து இவ்வுலகில் கூர்மையடைந்து வந்தாலும் புதிய அணு ஆயுதங்களின் கண்டுபிடிப்பும் அவற்றின் அழிக்கும் திறனும் அதிகரிக்க அதிகரிக்க உலகப் போருக்கான வாய்ப்புகள் குறைந்து கொண்டு வருவதை யுத்த விஞ்ஞானிகள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இவ்வகையில் தமிழீழத்திற்கான போராட்டத்தை தேசிய இன, பொருளாதார, கலாச்சார முரண்பாடுகளின் பரிணாம வளர்ச்சியாக ஏற்றுக்கொண்ட நாங்கள் இப்போராட்டம் தமிழீழ விடுதலையில் தான் முற்றுப் பெறும் என்பதை தெளிவாக உணர்ந்துள்ளோம். தமிழீழத்திற்கான போராட்டம் உலக யுத்த அபாயத்தினால்தோற்றுவிக்கப்பட்ட ஒன்று அல்ல. அதே போல் உலக கம்யூனிச பரபின் குழந்தையாக இப்போராட்டம் கருவுறவில்லை. தமிழீழ விடுதலை ஒரு உண்மையான அரசியல், பொருளாதார விடுதலையாக அமையவேண்டும் என்பதில் நாங்கள் தெளிவாக உள்ளோம். அதற்காக உள் முரண்பாடுகளை நன்கு அறிந்து போராட்ட வடிவங்களை திட்டமிட்டு செயல்படுத்திக் கொண்டுள்ளோம்.

வியட்நாமின் விடுதலைக்காக, வியட்நாமை நேசிப்பவர்கள் என்ற பொருள்படும், வியட்மின் (Vietminh) என்ற அமைப்பை ஏற்படுத்தி ஹோ-சி-மின் போராடினாரே தவிர தன்னையும் தன் அமைப்பையும் மரபு மார்க்சிய்

(9-ம் பக்கம் பார்க்க)

''பாட்டாளி வர்க்கத்தின் அயல்த்துறைக் கொள்கையானது எல்லா ஏகாதிபத்திய வாதிகளுக்கும் எதிராக முன்னேற்றமடைந்த நாடுகளின் புரட்சியாளர்களுடனும், கூட்டணி வகுத்துக் கொள்வதாகும்''

—லெனின்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தென்னாபிரிக்க விடுதலைப் போராட்டம்

இன்று உலகில் நடைபெறும் போராட்டங்களில் மிகவும் நீண்டதும் உக்கிரமானதும் தென்னாபிரிக்க விடுதலைப்போராட்டமாகும். இப்போராட்டத்தைப்பற்றி சரியாக விளங்கி கொள்வதற்கு தென்னாபிரிக்காவின் சமுதாய அமைப்பைப் பற்றியும் போராட்டத்தை நடத்தும் விடுதலை இயக்கமான ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் பற்றியும் அறிந்து கொள்வது முக்கியம்.

## சரித்திர கண்ணோட்டம்

இன்று நாம் தென்னாப்பிரிக்கா என அழைக்கும் பிரதேசம் கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய துணைகண்டமும் ஆஸ்திரேலியா, அன்டிராட்டிக்கா கண்டங்களை உள்ளடக்கிய கொண்டவனலாண்ட் (Gondawanaland) எனும் பெரும் கண்டத்தின் பகுதியாயிருந்தது. பின்னர் கண்டங்கள்பிரிந்த பின்னர் தென்னாப்பிரிக்காவின் புவியியல் நிலை பின்வருமாறு அமைந்துள்ளது.

மத்திய பகுதியில் லெசோத்தோவை உள்ளடக்கிய பகுதிகளில் டிராக்கென்ஸ்பேர்க் மலைத்தொடர் தெற்கு பகுதியில் மட்டமான நிலவெளி. வடக்குப் பகுதியில் மட்டமான நிலவெளியுடன் சிறுகாட்டுப் பகுதி.

மேற்குபகுதி பாலைவனபிரதேசம். கிழக்குப்பகுதி பச்சைவளமுள்ள நிலப்பகுதி.

சுவாத்தியம்—கோடை காலம் கார்த்திகை தொடக்கம் மாசி மாதம் வரை. இக்கால கட்டத்தில் கடுமையான வெயிலும் இடி முழக்கத்துடன் கூடிய மழையும் உண்டு. பங்குனி மாதம் தொடக்கம் வைகாசி வரை இளவேனிற் காலம் வைகாசி முதல் ஆவணி வரை மாரி காலம். மாரி காலத்தில் கடும் குளிர் உண்டு. மத்திய மலைப்பகுதியில் சீதோஷ்ண நிலை —20°C வரை இறங்கும். பனி விழுந்து கொண்டிருக்கும். புரட்டாசி முதல் கார்த்திகை வரை சரத் காலம். இக்கட்டத்தில் மரங்களில் இலைகளும் பூக்களும் தோன்றுவதால் பல பிரதேசங்கள் அழகாகத் தோன்றும்.

சரித்திர கால கட்டம் தொடக்கத்தில் ஏறக்குறைய 1500 ஆண்டுகளுக்கு முன்னர் தென்னாபிரிக்காவில் வெவ்வேறு நாடோடி மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களில் முக்கியமான பிரிவு கொட்டன்டொட் (Hottentots) எனப்படும் மக்கள். இவர்கள் இப்பொழுது தென்னாப்பிரிக்காவில் கேப் மாகாணம் (Cape province) என அழைக்கப்படும் பகுதியில் நாடோடிகளாக வாழ்ந்து வந்தனர். இவர்கள் நிறத்தை பொறுத்தமட்டில் வெள்ளை நிறத்தவர். ஆனால் சுருட்டை (Stunted hair) மயிர் கொண்டுள்ளனர். இவர்கள் கேப் மாகாணம் பூராவும் ஆட்டு மந்தைகளுடன் நாடோடிகளாக திரிந்தனர். இவர்கள் ஆப்பிரிக்கர்கள் என்று கருதப்பட்டாலும் நிக்ரோயிட் முக அமைப்பு அற்றவர்களாதலால் நிக்ரோயிட் என கருத முடியாது.

ஏறக்குறைய 1000 ஆண்டுகளுக்கு முன்னர் மத்திய ஆப்பிரிக்காவிலிருந்து ஏனைய கறுப்பு இன சாதிகள் தெற்கு நோக்கி நகர தொடங்கினர். இவர்களும் நாடோடிகளே. இவர்களில் ஒரு பகுதியாகிய சோசா (Xhosa) மக்கள் இன்று தென்னாப்பிரிக்காவில் (Transkev) என அழைக்கப்படும். தென்னாபிரிக்காவில் தென்கிழக்கு கரையோரம் நெடுக குடியேறினர். இவர்களைத் தொடர்ந்து சூளு (Zulu) எனப்படும் கறுப்பு இனச்சாதியினர் கிழக்கு கடற்கரையோரத்திலும் பசோதா (Basoto) எனப்படும் சாதியினர் மத்திய பகுதியிலும் ஏனைய சிறு சிறு சாதியினர் வடபகுதியிலும் குடியேறினர். இவர்களுக்கிடையில் போர்களும் சண்டைகளும் நடைபெறுவதுண்டு.

15ம் நூற்றுண்டில் முதன் முதலில் போர்த்துக்கேயர் தென்னாபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைத் தாண்டி இந்து மகா சமுத்திரத்திற்குள் சென்றனர். இவர்கள் தென்னாபிரிக்காவின் தெற்கு முனையில் ஒரு வாசஸ்தலத்தை அமைத்துச் சென்றனர். இவர்கள் அப்பகுதியில் வாழ்ந்த கொட்டன்டொட் (Hottentots)யுடன் ஆட்டுத்தோல் முதலியவற்றை வாங்கி பண்டம் பரிமாறலில் ஈடுபட்டனர்.

இவர்களுக்கு அடுத்தப்படியாக இப்பகுதிக்கு வந்த டச்சுக்காரர்

---

சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் தான் ஏழைய நாடுகளின் கோடிக்கணக்கான உழைக்கும் மக்களின், சுரண்டப்பட்ட ஓரே நேச சக்தியாகும்.

—லெனின்

---

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கேப் பகுதியில் ஒரு தளத்தை அமைத்து குடியேறத் தொடங்கினர். இவர்கள் தமது ஆயுத பலத்தை உபயோகித்து அப்பகுதிகளில் வாழ்ந்த கொட்டன்டொட் மக்களை வேட்டையாடி அழித்து பெண்களைக் கற்பழித்தனர். இதன் விளைவாக இப்பகுதியில் வாழ்ந்த கொட்டன் டொட்ஸ் மக்கள் படிப்படியாக அழிக்கப்பட்டு கலப்புஇன மக்கள் உருவாயினர். இந்த டச்சுக்காரர் (பின்னர் போர்ஸ் (Boers) என அழைக்கப்பட்டனர்) துவக்கு போன்ற ஆயுதங்களைக் கொண்டிருந்தமையால் படிப்படியாக சோசா (Xhosa) மக்களையும் தோற்கடித்து அப்பகுதிகளையும் தமது ஆட்சியின் கீழ் கொணர்ந்தனர்.

இதே கால கட்டத்தில் கிழக்கு கரையோரத்தில் பிரித்தானியர் வந்து இறங்கினர். அவர்கள் படிப்படியாக கிழக்கிலிருந்து முன்னேறி இப்பொழுது நெட்டால் என அழைக்கப்படும் (Natal) கிழக்குப் பகுதியை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர். பின்னர் போர்ஸ்க்கிற்கு (Boers) எதிராக போராடிய பசோதா மக்கள் பிரித்தானியரின் பாதுகாப்பைப்பெற்றுக் கொண்டனர். இப்பகுதி நாளடைவில் பிரித்தானிய சாம்ராச்சியத்தின் ஒரு பகுதியாக மாறி 1965ல் சுதந்திரம் பெற்ற பின்னர் லெசோதோ (Lesotho) என அழைக்கப்பட்டது.

நெட்டால் பகுதியில் பெருமளவு பிரித்தானியர் குடியேறினர். இவர்கள் சீனித்தோட்டங்களை உருவாக்கினர். இத்தோட்டங்களில் வேலை செய்வதற்கு ஆயிரக்கணக்கான இந்தியர்கள் (தமிழர்கள், தெலுங்கு மக்கள்) கொண்டு வரப்பட்டனர். (18ம் நூற்றாண்டில் இது)

கிழக்கிலிருந்து ஆக்கிரமித்த பிரித்தானியருக்கும் மேற்கிலிருந்து வந்த போர்ஸ் (Boers) க்குமிடையில் மோதல் ஏற்பட்டது. இருபோர்களின் விளைவாக தென்னாப்பிரிக்காவின் சகல மாகாணங்களும் இணைக்கப்பட்டு (லெசோத்தோ தவிர) பிரித்தானிய அரசின் கீழ் சுயாட்சி வழங்கப்பட்டது. ஆனால் இந்த சுயாட்சி வெள்ளையருக்கு மட்டுமே. வெள்ளையரில் இருபகுதியினர் உண்டு.

1) போர்ஸ் (Boers) — இவர்கள் டச்சு கலப்பு மொழியான ஆப்பிரிக்கானிஸ் (Afrikanese) மொழி பேசுபவர்கள்.

2) பிரித்தானிய — ஆங்கில மொழி பேசுபவர். அதிகாரம் கூடுதலாக பிரித்தானியரின் கையிலேயே இருந்தது.

இக்கால கட்டத்தில் தென்னாப்பிரிக்காவில் தங்க வைரச்சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இவை பெரும் பிரித்தானிய, அமெரிக்க கம்பெனிகளான Anglo அமெரிக்கன் காப்பரேஷன், Debeersக்கு சொந்தமாயின. இவற்றுள் வேலை செய்வதற்கு லட்சக்கணக்கான ஆப்பிரிக்கர்கள் சோசா, பசோதோ, சூலு பகுதிகளில் இருந்து சேர்க்கப்பட்டனர். மிக மோசமான நிலைகளில் ஆப்பிரிக்க தொழிலாளர்கள் மிக மோசமாக சுரண்டப்பட்டனர். இவர்களுக்கு மேற்பார்வையாளர்களாக வெள்ளை அதிகாரிகள் இருந்தனர். இவர்கள் கறுப்பர்களை காப்பிரி (kaffir) எனவும் இந்திய தொழிலாளர்களை கூலிகள் (Coolies) எனவும் அழைத்தனர்.

இக்கால கட்டத்தில் வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக போராடுவதற்கு கறுப்பு இனத்தவர், இந்தியர்கள், கலப்பு இனத்தவர்களை உள்ளடக்கி ஒரு இயக்கம் உருவானது. 1922ல் உருவான இந்த இயக்கம் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் (ஆ.தே.கா). என அழைக்கப்பட்டது. இதன் முதற் தலைவர் அல்பேர்ட் லூத்துலே (Albert Luthuli) ஆவர். இவருடைய ஏனைய சகாக்கள் டாக்டர் யூசுப் டாடு (இந்தியர்), ஜே. பி மார்க்ஸ், பிராம்பிசர் (வெள்ளையர்) முதலியோர் ஆவர். இவர்கள் அகிம்சை முறையில் வெள்ளையர் ஆட்சிக்கெதிராக போராட்டங்களை நடத்தினர். ஆ. தே. காங்கிரஸின் கொள்கைகள் பின்வருமாறு:

(தொடரும்)

---

7-ம் பக்கத் தொடர்ச்சி

அமைப்பு என்று ஒரு பொழுதும் பறை சாற்றிக் கொள்ளவில்லை. அதேபோல் காஸ்ட்ரோவின் தலைமையில் கியுபாவின் மக்களை பாஸ்புடாவின் கொடுங்கோன்மையிலிருந்து விடுவிக்க பிடலிஸ்டாஸ (Fidelistas) என்ற அமைப்பு போராடியதே தவிர கம்யூனிச மரபுகளை கடைபிடிப்பதற்காக போராடவில்லை.

விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தில் நாங்கள் எமது மக்களையே பிரதான சக்தியாக ஆவதானிக்கிறோம். எமது இயக்கத்தின் பங்கானது எம் மக்கள் ஆயுதப் போராட்டத்தில் வெற்றி அடைவதற்கான கருவி, பொருளாதாரம், உள்நாட்டு அரசியல், வெளிநாட்டு ராஜதந்திரிகம், ராணுவ நடவடிக்கைகள் போன்றவைகளை முறையாக ஒழுங்குபடுத்தி எம்மக்களின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு உதவும் வழிகாட்டியாக அவதானிக்கிறோம். விடுதலைக்காக ஆயுதம் தரித்த எம் மக்கள் அவ் விடுதலை உண்மையான விடுதலையாக அமையும் வரை ஆயுதங்களை களைய மாட்டார்கள் என்பதில் நாங்கள் வேறு எந்த மரபுகளைக் காட்டிலும் எமது மக்களின் மேல் அதிக நம்பிக்கை வைத்துள்ளோம். "எமது மக்களே எம்மை புரட்சியாளர்களாக்கினர்", என்று எமது செயலதிபர் உமா மகேசுவரன் கூறியது, எமது இயக்கம் எம் மக்களின் பால் கொண்டுள்ள நம்பிக்கையையும் "மக்களிடமிருந்து கற்றுக் கொள்", என்ற மாவீரன் லெனினின் கூற்றுக்கேற்பமக்களிடமிருந்து கற்றுக்கொண்டு மக்களுக்காகவே இயங்குவதை தனது வரலாற்று கடமையாக கருதுவதையுமே வெளிப்படுத்துகின்றது.

"சோசலிச சமுதாயம் கற்பனை வாத எண்ணங்களினால் ஏற்படுவதல்ல, மாறாக சரித்திரத்தினால் நிருபணம் செய்யப்படவேண்டிய ஒரு உண்மையாகும்."

---

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# C. I. A.

## லத்தீன் அமெரிக்க நாடுகளில்

காலனித்துவ ஆட்சிக்குட்டுபட்டு நூற்றுண்டுகளாக சீரழிக்கப் பட்டு வந்த லத்தீன் அமெரிக்க நாடுகள் இந்நூற்றுண்டின் ஆரம்பத்தில் காலனித்துவ ஆட்சிப் பிடியிலிருந்து விடுபட்டு சுயாட்சியை நிறுவின. சுயாட்சியானது அன்னிய ஆட்சிக்குப் பதில் உள்நாட்டு முதலாளித்துவ சர்வாதிகார சிறுபான்மைக் குழுக்களின் கையில் சென்றடைந்தது. இந்நாடுகளின் அருகில் அமைந்திருந்த அமெரிக்க முதலாளித்துவ நாடாகவும் உலகின் மிகப் பெரிய ஏகாதிபத்திய நாடாகவும் இருந்தமையால் லத்தீன் அமெரிக்க நாடுகளின் முதலாளித்துவ சர்வாதிகார அரசுகளுடன் ஓர் வர்க்க இசைவை ஏற்படுத்துவது சுலபமாயிற்று. தேசிய உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு சுரண்டும் வர்க்கம் என்ற அடிப்படையில் லத்தீன் அமெரிக்க நாடுகளின் மூலவளங்களை சுரண்டவும் அந்நாடுகளின் சந்தையை ஏகபோக உரிமையாக்கவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு சகலவிதமான ஒத்துழைபபை இந்நாடுகளின் முதலாளித்துவ அரசுகள் வழங்கின இரண்டாம் உலகப் போரின் பின் இந்நாடுகளின் உழைக்கும் மக்களின் மத்தியில் பரவிய புரட்சி மனப்பான்மையும் வர்க்க உணர்வும் சர்வாதிகார அரசுகளுக்கெதிராக சிறு கலவரங்களாகவும் மாணவர் போராட்டங்களாகவும் ஆரம்பித்து ஆயுதம் தாங்கிய போராட்டமாக பரிணமித்தது.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஐ நா சபையின் பொருளாதார கமிட்டியால் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விவர ஆய்வின்படி இந்நாடுகளின் 20 சதவித மக்கள் நாட்டின் மொத்த வருவாயில் 3.1 சதவீதத்தை மட்டுமே பெறுவதால் மிக வறிய நிலைக்கு தள்ளப்பட்டு படுமோசமான சுரண்டலுக்கு உள்ளாகின்றனர். உழைக்கும் வர்க்க மக்களாகிய 50 சதவீதத்தினர் வருவாயில் 13.4 சதவீதத்தைப் பெறுகின்றனர். அதே வேளை சுரண்டும் வர்க்கமாகிய சிறுபான்மை 5 சதவீதத்தினர் மொத்த வருவாயில் 33.4 சதவீதத்தைத் தமதாக்கித் கொள்கின்றனர். இச்சிறுபான்மை முதலாளிகளின் வருவாயில் பெரும்பங்கு தொழிலாளி வர்க்கத்தின் உழைப்பின் ஒரு பகுதியை சுரண்டி லாபம் என்ற பெயரில் சுருட்டப்படுகின்றது. உதாரணமாக மெக்சிக்கோவில் முதலாளிகளின் வருவாயில் 60 சதவீதம் இலாபப் பங்கீடுகளாகும். அதே போல் எல். சல்வடோரில் 80 சதவீதமும் ஆர்ஜன்டீனுவில் 85 சதவீதமும் ஆகும். இப்புள்ளி விபரம் உள்நாட்டு முதலாளிகளின் சுரண்டலை காட்டுகின்றது. லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு வெளியில் உள்ள முதலாளித்துவ சக்திகளும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் இந்நாடுகளில் மிகப் பெரும் சுரண்டல் மோசடியை செய்கின்றன. 1961ல் இருந்து 1970வரையில் 20 பில்லியன் டாலர்களுக்கு மேல் றேயல்டியாகவும், வட்டியாகவும் அன்னிய முதலீட்டின் இலாப பங்கிகளாகவும் அமெரிக்காவை சென்றடைந்துள்ளன. இத்தொகையின் 30 சதவீதம் லத்தீன் அமெரிக்க நாடுகளின் ஏற்றுமதி மிகுதியாலும் 70 சதவீதம் புதிய கடன்கள், புதிய முதலீடுகள் என்பவற்றுலும் ஈடு செய்யப்பட்டு மென்மேலும் கடன்காரர்களாகின. இப்பத்தாண்டு காலத்தில் புதிய அன்னிய முதலீடுகளாக 5.5 பில்லியன் இருந்த வேளை 20 பில்லியன் டோலர் அமெரிக்காவுக்கு செலுத்தப்பட்டது.

ரஷ்யாவில் ஏற்பட்ட சோவியத் சோசலிச புரட்சி ஏனைய நாடுகளிலும் பரவாமல் தடுக்க சோவியத்தின் ''இரும்புத்திரையை உடைத்தெறிவேன்'' என கங்கணம் கட்டிய அமெரிக்காவும் அதன் கொலைகாரக் கும்பல் சி. ஐ. ஏயும் முற்போக்கு சக்தியின் முன் தோல்வியை நழுவ வேண்டியதாயிற்று. இரும்புத்திரை உடைக்கும் திட்டம் (Rolling of Iron cewlir) தோல்வியடைந்தபின் ஐரோப்பிய நாடுகளில் மேலும் புரட்சிகள் பரவாமல் தடுக்கும் நடவடிக்கைகளை சி. ஐ. ஏ. மேற்கொண்டது. காலனித்துவ ஆட்சிக் காலத்தில் ஆசிய ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளை சுரண்டி கொழுத்திருந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளில் சி. ஐ. ஏ. யின் திட்டங்கள் ஓரளவுக்கு தற்காலிக வெற்றியை கொடுத்தன.

கியூபா, பொலிவியா, ஆர்ஜன்டீனு, ஈருவடோர், எல்-சல்வடோர், மெக்சிக்கோ, சிலி, நிக்கரகுவா உருகே, பெரு, பிரேசில் போன்ற நாடுகளில் தோன்றிய புரட்சி இயக்கங்களை நசுக்கி அழித்தொழித்தாலன்றி அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன்கள் மிக மோசமாக பாதிக்கப்படுமென உணர்ந்த சி. ஐ. ஏ. அதற்கான திட்டங்களை பல முறைகளில் தயாரித்தது. முதற்கட்டமாக இந்நாடுகளின் முதலாளித்துவ சர்வாதிகார அரசுகளுடனும் ஏனைய முதலாளித்துவ சக்திகளுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்தி அரசுகளின் ஒத்துழைப்பு கிடைத்தபின் அரசுடன் சேர்ந்தோ இல்லையேல் இரகசிய நடவடிக்கைகள் மூலமோ இந்நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடல். அதன் மூலம் அமெரிக்க நலன்களை பாதிக்கக்கூடிய அரசின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல். புரட்சி இயக்கங்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களை அழித்தொழித்தல், புரட்சி மனப்பான்மை தோன்றக் காரணமாயிருந்த சமூக முரண்பாடுகளை சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் சமரசம் செய்தல். தேவை ஏற்படின் கலாச்சார சீரழிவுகளை மேற்கொண்டு சமூக உணர்வை திசை திருப்புதல் போன்ற திட்டங்களை மேற்கொண்டனர்.

படு பிற்போக்கானதும், கொலை வெறிபிடித்ததும் மனித சமூகத்தால் வெறுக்கப்படுவதுமான சி. ஐ. ஏயின் சகல நடவடிக்கைகளுக்கு இரகசியமாகவும், பகிரங்கமாகவும் ஆதரவளித்து அங்கீகாரம் வழங்கும் அமெரிக்க அரசு தேவைவான பணத்தையும் இரகசியமாகவே கொடுத்துதவுகின்றது. இதன் மூலம் அமெரிக்க நாட்டின் உழைக்கும் மக்களே ஏமாற்றப்படுகின்றனர்.

லத்தீன் அமெரிக்காவில் பொருளாதார அபிவிருத்திக்கான உதவி என்ற போர்வையில் ஓர் சமூக பொருளாதார ஆய்வு பல கோடி டாலர் செலவில் மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வின் மூலம் இந் நாடுகளில் மக்களின் சமூக பொருளாதார-கலாச்சார உறவுகளையும் புரட்சி மனப்பான்மையின் தன்மையையும் மிகத் தெளிவாக சி. ஐ. ஏ. அறிந்து கொண்டது. இம்முடிவுகள் மக்கள் புரட்சிக் கெதிரான திட்டங்களை தீட்டி நடைமுறைப்படுத்துவதை சுலபமாக்கிற்று.

முதலாளித்துவ சர்வாதிகார அரசுகளுடன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்த அமெரிக்கா பல கோடி டாலர் பெறுமான உதவிகளை செய்கின்றது. உண்மையில் அமெரிக்காவின் ஒவ்வோர் டாலர் உதவியும் பாசிசத்துக்கு துணையாக கொடுக்கப்பட்ட உதவியே. உதாரணமாக பிரேசில் நாட்டு பாசிச அரசுக்கு அமெரிக்கா வெளிப்படையாகவும் சி. ஐ. ஏயினூடும் 16.5 கோடி டாலர் பெறுமதியான இராணுவ தளபாடங்கள், இராணுவ புலனாய்வு துறைக்கு பயிற்சிகள் நன்கொடைகள் ஆகிய இராணுவ உதவி திட்டத்தையும், 80 லட்சம் டாலர் பெறுமான சர்வதேச அபிவிருத்தி ஏஜென்சியின் போலீஸ் படைக்கான உதவி திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் பிரேஸில் போலீசாருக்கான பயிற்சியும் யு.எஸ்.இன் பொருளாதார உதவி திட்டத்தின்கீழ் 1972-இல் இருந்து கடந்த 25 ஆண்டுகளில் 4 பில்லியன் டாலர் உதவியையும், அமெரிக்க ஆதிக்கம் கூடிய பல்வழி அபிவிருத்தி உதவி திட்டத்தின் கீழ் 2.5 பில்லியன் டாலர் உதவியையும் வழங்கியது. இத்தனை உதவிகளையும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள 5 கோடி மக்கள் மேலும் மேலும் வறுமை நிலைக்கு செல்லவும் ஒரு சிறு பகுதி ஆளும் வர்க்கமும் அவர்களின் இராணுவ கையாட்களும் மேலும் மேலும் கொழுத்த பணக்காரராகவும் ஆக்கவே பயன்படுத்தப்பட்டது. பலகோடி டாலர் உதவியை பெற்ற பிரேசில் நன்றியுபகாரமாக தனது ஏற்றுமதி சந்தையை விரிவுபடுத்தி உள்நாட்டு நுகர்வோர் சத்தியை குறைத்தது. இதனால் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சியை அடக்க காட்டுமிராண்டித்தனமான அடக்கு முறையை கட்டவிழ்த்துவிட்டது. குழந்தைகள் அவர்களின் பெற்றோரின் கண் முன்னே சித்திரவதை செய்யப்பட்டனர். மதகுருமார், கன்னியாஸ்திரிகள் போன்ற மார்க்சிசவாதிகளே அல்லாத மனிதாபிமானத்துக்காக மட்டுமே குரல் கொடுப்போர் கூட ஆயிரக்கணக்கில் சிறைபட்டு சித்திரவதைக்கும் கொலைவெறிக்கும் ஆளாகினர். இத்தனை அடக்கு முறைகளையும் அமெரிக்காவின் தாராள பொருளாதார, இராணுவ உதவிகளுடனும் சி. ஐ. ஏ யின் வழிகாட்டலுடனும் செய்தது. இதுபோன்ற நடவடிக்கைகளும் அக்கிரமங்களும் 1971 இல் பொலீவியாவிலும் 72இல் உருகேயிலும் 73இல் சிலியிலும் நடந்தேறின.

தொடரும்

(முதற் பக்கத் தொடர்ச்சி)

னால் அதிக ஆதாயம் ஏகாதிபத்தியத்திற்கே கிடைக்க முடியும்.

திருமதி இந்திரா காந்தியைக் கொலை செய்வதன் மூலம் உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டின் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட முற்போக்குத் தலைமையை ஒழித்துக்கட்டி இந்தியாவில் ஸ்திரமற்ற அரசாங்கத்தை ஏற்படுத்துவதும் வெளிநாட்டுக் கொள்கையில பாரிய மாற்றங்கள் ஏற்பட நிர்ப்பந்திப்பதும், இந்துமகா சமுத்திரம் சமாதான மண்டலமாவதைத் தடுப்பதும், இதன் மூலம் இலங்கையின் திருகோணமலையை ஏகாதிபத்தியம் தனது இராணுவத்தளமாக்கிக் கொள்ளும் வாய்ப்புகளை ஏற்படுத்துவதுமே ஏகாதிபத்தியத்தின் எதிர்பார்ப்புகளாகும்.

ஏகாதிபத்தியத்திற்கு சார்பான மேலே குறிப்பிடப்பட்டவை நடப்பதை தடுத்து நிறுத்துகின்ற பாரிய பொறுப்பு பாரதத்தின் புதிய பிரதமர் ராஜீவ் காந்திக்கு உண்டு. அவர் இதை உறுதியுடன் செய்வதற்கு இந்தியாவின் முற்போக்குச் சிந்தனையுள்ள மக்களும் சக்திகளும், கட்சிகளும் புதிய பிரதமருக்கு ஒத்தாசை செய்வார்களென நாம் நம்புகின்றோம்.

அதே வேளையில் தென் ஆசியாவை ஏகாதிபத்தியம் தனது வேட்டைக் காட ாக்குவதைத் தடுப்பதில் தமிழீழத்து மக்களும் விடுதலை இயக்கங்களுக்கும்கூட பாரிய பொறுப்புண்டு.

ஏனெனில் நாம் எடுக்கின்ற ஒரு தவறான நடவடிக்கைகூட ஏகாதிபத்தியத்திற்குச் சாதகமானதாக அமைந்துவிடலாம்.

எனவே விடுதலை இயக்கங்கள் மிகப் பொறுப்புடனும் நிதானத்துடனும் செயற்படவேண்டும்.

பாரதப் பிரதமரின் மெய்க்காவல் படைக்குள்ளேயே ஊடுருவிய ஏகாதிபத்திய சக்திகளைப்போல, தமிழீழத்திற்காகப் போராடுவதாக ஏமாற்றிவரும் உதிரிகளைச் சி ஐ.ஏ. விலைக்கு வாங்குவது அவ்வளவு கஷ்டமானதல்ல.

இது தமிழீழ விடுதலைக்கு மட்டுமல்ல பாரதத்திற்குக்கூட பேராபத்தை விளைவிக்கும் என்பதால் நாம் முன்னர் பலமுறையும் இனங்காட்டியுள்ள தனி நபர்களையிட்டு தமிழ் மக்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அவர்களைத் தேசவிடுதலையின் பெயரால் பொது வாழ்விலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்,

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப் போராட்டத்தில் பெண்கள்

ஏகாதிபத்திய நாடுகளும், அதன் ஆதிக்கத்துக்கு உட்பட்டுள்ள, உட்பட்டுவரும் நாடுகளும் பெண்களை "ஒரு விலைபொருளாகவும், காட்சிப் பொருளாகவும் மென்மையானவர்களாகவும் சிறிய பிரச்சனையைக்கூட தாங்க முடியாதவர்களாகவும் சித்தரிக்கின்றன. தமது காலனித்துவ நாடுகளிலும், தமது ஆதிக்கத்துக்கு உட்பட்டுள்ள நாடுகளிலும் விடுதலை வேண்டிப் போராடும் மக்களிற்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் முக்கியமாக பெண்களின் மேல் சித்திரவதை, பலாத்காரம் போன்ற நடவடிக்கைகளை மேற்க்கொள்வதில் கருத்தாக உள்ளன. இதன் மூலம் பெண்களின் போராட்ட எழுச்சியை பயமுறுத்தல் மூலம் முளையிலேயே மழுங்கடிப்பதும், இவர்களின்மேல் செலுத்தும் அட்டூழியங்களால் இவர்களின் சகோதரர், தந்தை மகன் போன்றவர்களை பாசஉணர்வால் போராட்ட உண்மை மழுங்கடிக்கச் செய்வதையும் தந்திரமாக கொண்டு செயற்படுகின்றன.

இவைகளை நியாயப்படுத்தும் விதத்தில் கலவரங்களின் போது நடந்த பகிரங்கபலாத்காரம், சித்திரவதைகளை, பாடசாலை மாணவிகளை கடத்திச்சென்று பலாத்காரம் புரிந்தது அண்மையில் வவுனியாவிற்கு அருகாமையில் பஸ்சைமறித்து ஆண்களை துப்பாக்கியால்சுட்டுபெண்களை கடத்திச் சென்று கற்பழித்ததும், கடந்தமாதம் மாதகலில் பெண்களை கற்பழித்தநடவடிக்கைகளையும்குறிப்பிடலாம். மேலும் இராணுவ அட்டூழியங்களுக்கு பயந்து வீட்டைவிட்டு வெளியேறிய நிலையில் தனிமையில் இருக்கும் பெண்களை கொடுமைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் தமிழீழத்தில் சர்வசாதாரணமாகி விட்டன. இங்கு முக்கியமாக பெண்கள் போராட்டத்தின் பங்கு பற்றாமல் பார்வையாளராக இருப்பது இவர்களுக்கு வசதியாக அமைகின்றது.

ஆகவே நாம் இதற்கான மாற்று போராட்ட நடவடிக்கைகளை மேற்க்கொள்ளுதல் அவசியமாகின்றது. அண்மையில் நடத்தப்பட்ட தாய்மார்களின் ஊர்வலம் போன்ற ஆரம்ப போராட்ட வடிவ நடவடிக்கைகளினூடாக பெண்கள் தமக்கேற்ற போராட்ட நடவடிக்கைகளை சூழ்நிலைக்கேற்ப முன்னெடுத்து தமது நிலையை ஸ்த்திரப்படுத்த வேண்டும், மற்றும் பழய பிற்போக்கான பெண்ணடிமைத்தன கொள்கையில் இருந்து விலகி, எவ்வாறு ஆண்கள் ராணுவத்தால் சித்திரவதைக்குட்பட்டு திரும்பும் போது சமுதாயத்தால் மதிக்கப்படுகின்றனரோ அவ்வாறு பெண்களையும் சமுதாயம் மதிக்கவேண்டிய தேவையை நடமுறைப் படுத்துவதினாலுமே, எமது எதிரியின் எதிர்பார்ப்புகளை முறியடிக்கலாம்.

எமது இனத்தின் பெரும்பகுதியான பெண்களின் பலத்தை விடுதலையின்பால் ஒருமுகப்படுத்துவதன் மூலம் எமது பூரண விடுதலையை வென்றெடுக்க முடியும்.

——X——

# ரேகன் மீண்டும் வெற்றி

அமெரிக்கா ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றபின் ரேகன் முதலாவதாக ஆற்றிய உரையின்போது தன்னுடைய வெற்றி தான் கடைப்பிடித்து வரும் கொள்கைகளுக்கு அமெரிக்க மக்கள் அளித்துள்ள அங்கீகாரம் என்றும் தொடர்ந்தும் இதே கொள்கைகளை தான் திடசங்கர்ப்பத்துடன் தொடர்வேன் என்றும் கூறியுள்ளார் இவர் இதுவரை கடைப்பிடித்து வந்த கொள்கைகளாவன.—

லத்தீன் அமெரிக்க கபீரியன் நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிட்டது.

தென்கிழக்காசிய பிராந்தியத்தில் பாசிச ஆட்சிகளுக்கு அங்கீகாரம் அளித்தும், வெகு ஜனமக்கள் இயக்கங்களை அடக்குவதற்கு எல்லாவகையான உதவிகளை வழங்கியும் வந்தது.

பாகிஷ்தான், பங்களதேஷ், சிறீலங்கா ஆகிய நாடுகளை தனது ஆதிக்கத்துட்படுத்தி தெற்காசிய பிராந்தியத்தில் அமெரிக்க செல்வாக்கை விஸ்தரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

இந்தியாவின் உள்நாட்டில் குழப்பங்களை உண்டுபண்ணி ஸ்திரமற்ற ஆட்சி நிர்வாகத்தினூடாக அமெரிக்க செல்வாக்கை நிலைநாட்டுதல் மத்திய கிழக்கில் பலஸ்தீனியர்களுக்கு எதிராக மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகள்;

அரேபிய மக்களுக்கு எதிரான இஸ்ரேலீய ஆக்கிரமிப்பை இராணுவ, பொருளாதார ரீதியாக அங்கீகரித்தது;

நபீபியாவில் விடுதலைப் போராட்டத்தை தொடந்து எதிர்த்து வந்தது;

அமெரிக்க அணுவாயுத குவிப்பை தொடர்ந்து பெருக்கி வருவது போன்றன.

இந்த நடவடிக்கைகளை தொடர்ந்தும் பெற்ற ஆதரவுடன் விஸ்தரிப்பார் என்பதில் ஐயமில்லை. முக்கியமாக எங்களது விடுதலையை பொறுத்தளவில் தெற்காசிய பிராந்தியத்தின் நடவடிக்கைகளில்ஒன்றாக தமிழீழத்தின் பகுதியான திருக்கோணமலையை தளமாக்க தனது சட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நடவடிக்கைகளை வெகு விரைவில் மேற்கொள்ளும் என்பதை கருத்தில் கொண்டு இவ்வகையான நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு அனைத்து முற்போக்கு சக்திகளும் இணைந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நடவடிக்கைகளை முறியடிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

உங்கள் கையில் தவழும் ஒவ்வொரு இதழும் சிறிலங்கா அரசாங்கத்தினதும் எதிர்புரட்சியாளானதும் கடுமையான தடைகளை மீறியே வந்து சேருகிறது. ஆகவே ஒவ்வொரு இதழையும் வீணாக்காது எல்லோரும் படிக்க கொடுக்கவும்.

வெளியீடு: செய்தி-தொடர்பு திணைக்களம்-தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்
Printed by Grafton Litho (TU) Ltd., 5b Old Town, London SW4 0JT

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்